## இயேசு யார்?

இது சாதாரணமாகக் கேட்கப்பட்டாலும், இதற்கான பதிலை எளிதில் யாராலும் கொடுக்க முடிகிறதில்லை. இயேசு யார் என்பது குறித்து பலர் நடுவில் பலவிதமான அபிப்பிராயங்கள் இருக்கின்றன.

ஆனால் இது குறித்துத் தெளிவான பதில் கிடைக்கக்கூடிய ஒரு இடம் உள்ளது. அதுதான் பரிசுத்த வேதாகமம்.

இந்த கைப்பிரதி நூலின் ஆசிரியர் பவுல் ஸில்மர் எளிதில் விளங்கும் வார்த்தைகளில், வேதாகமத்தினூடே இயேசுவைக் குறித்த உபதேசங்கள் குறித்தும், இன்று உனக்கு இயேசு என்ன செய்யக்கூடும் என்பது குறித்தும் எழுதி உள்ளார்.

**அட்டைப்பட விளக்கம் :** பலவித ஓவியர்களால் தீட்டப்பட்டு இயேசு காணப்பட்டதைக் கற்பனையாகப் பின்பற்றுகின்றவெவ்வேறு தர்மங்கள் மேல்நாடுகளிலும் கீழ்நாடுகளிலும் உள்ளன. ஆனால் வேதாகமத்தில் இயேசுவின் சரீர தோற்றத்தைக் குறித்து எந்த விவரமும் எழுதப்படவில்லை.

WHO IS JESUS - Tamil
1500 Copies - 2007


- இலவச மாதாந்திர வேதாகம பத்திரிக்கை
- வேதாகம தொடர் அஞ்சல் வழி கல்வி
- அருகாமையில் நடைபெறும் வேதாகம கலந்துரையாடல் வேதஆராய்ச்சி

மேல் கூறப்பட்டுள்ளவைகளுக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுதுங்கள்.

கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு தொடர்புக்கு

**கிறிஸ்டடெ.ஃல்பியன்ஸ்**
**தபால் பெட்டி எண் 4237**
**பெங்களூர் 560042, இந்தியா**

வேறு இடங்களுக்கு
Elsewhere:
**Printland Publishers, GPO Box 159,**
**Hyderabad A.P. 500001, INDIA**



# இயேசு யார் ?

**பவுல் ஸில்மர்**

# இயேசு யார் ?

**பவுல் ஸில்மர்**

## பொருளடக்கம்

இயேசுவை நாம் அறிவது எப்படி ? ..........
வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட குமாரன் ..........
குமாரன் பிறந்துள்ளார் ..........
போதகரான இயேசு ..........
பாவ நிவாரண பலி ..........
உயிர்த்தெழுதல் ..........
தேவனுக்கும் மனிதனுக்கும் மத்தியஸ்தர் ..........
கிறிஸ்தவத்தைப் பரப்புதல் ..........
இயேசு திரும்பவும் வருவார் ..........
கேள்விகள் ..........

The Communications and Literature requests from Readers in Karnataka, Kerala & Tamilnadu

**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.

**Elsewhere :**
**The Christadelphians,**
G.P.O. Box 159,
Hyderabad, A.P. 500001
India

**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA

**The Christadelphians,**
P.O. Box 9052,
Banani, DAKA - 1213
BANGLADESH

கர்நாடகம், கேரளா, மற்றும் தமிழ்நாடு பொது தொடர்பு விலாசம்

**கிறிஸ்டடெ·ல்பியன்ஸ்**
தபால் பெட்டி எண் **4237**
பெங்களூர் **560042,**
இந்தியா

இதர மாநிலங்கள்:
**கிறிஸ்டடெ·ல்பியன்ஸ்**
தபால் பெட்டி எண் **159**
ஐதராபாத், ஆந்திரா **500001**
இந்தியா

**கிறிஸ்டடெ·ல்பியன்ஸ்**
தபால் பெட்டி எண் **60**
நெகொம்போ - **11500**
ஸ்ரீலங்கா

**கிறிஸ்டடெ·ல்பியன்ஸ்**
தபால் பெட்டி எண் **9052**
பனானி, டாக்கா - **1213**
பங்களாதேஷ்

# இயேசு யார் ?

**பவுல் ஸில்மர்**

நசரேயனாகிய இயேசு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக, இன்று இஸ்ரவேல் என்றழைக்கப்படுகிற தேசத்தில் யூதகுல போதகராக இருந்தார். அந்தக் காலம் இஸ்ரவேல் ரோம சாம்ராஜ்யத்தின் கீழ் இருந்தது. அவர் தொழிலாளி குடும்பத்தில் வளர்ந்தார். அவர் முக்கியத்துவமில்லாத சிறிய ஊரில் பிறந்து, வழக்கமான உயர் கல்விப்பயிற்சி இல்லாமல் வளர்ந்தார். ஆயினும் அவருடைய போதனைகள் இந்த உலகத்தை மாற்றுவதாயிருந்தது.

கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படை இந்த இயேசுவில் இருந்தது. நம்மைப் போல ஒரு சராசரி மனிதனாகவும், அதே நேரம் ஜீவனுள்ள தேவனுடைய ஒரே பேறான குமாரனாகவும் அவர் இருந்தார். அவருடைய போதனைகள் தேவனுடைய செய்தித் தொடர்புகளாகவே இருந்தன.

அவருடைய போதனையின்படி மனுக்குலம் பாவம் என்னும் தோஷத்தினால் கறைபிடித்தாக இருக்கிறது. அந்த பாவத்தின் முடிவு (சம்பளம்) மரணம். ஆனால் இயேசு தாமே ஒருபோதும் பாவம் செய்யாதவராக இருந்தார். பாவத்திலிருந்தும், மரணத்திலிருந்தும் மனித குலத்தை விடுவிக்க தேவனால் அனுப்பப்பட்டார். இயேசு மரித்தார், ஆனாலும் தேவனால் உயிரோடு எழுப்பப்பட்டு, என்றைக்கும் உயிரோடு வாழ்ந்துக் கொண்டிருக்கிறார். ஆதலால் நமது கிறிஸ்தவ நம்பிக்கை நாமும் உயிரோடு எழுப்பப்பட்டு அவரோடு வாழுவோம் என்பதாகும்.

இந்தச் சிறிய புத்தகத்தின் மூலம் இயேசு யார்? அவருடைய பின்னணி, அவருடைய ஜீவியம், அவருடைய மரணம், இப்பொழுது அவருடைய நடவடிக்கை,



வருங்காலத்தில் அவருடைய நடவடிக்கை முதலியவைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

## இயேசுவை நாம் அறிவது எப்படி?

வேதாகமம் கிறிஸ்தவ மதத்தினரின் புனித நூலாக அழைக்கப்படுகிறது. வேதாகமம் இரண்டு பெரிய பகுதிகளை உடையது. பழைய ஏற்பாடு (எபிரெய வேதவாக்கியங்கள் என அழைக்கப்பட்டது) யூதர்களின் பரிசுத்த வேதாகமம். இது, தேவனால், வானமும் பூமியும் சிருஷ்டிக்கப்பட்டது முதல், இயேசுவின் காலம் வரை, மனிதனிடம் தேவன் செய்த எல்லாம் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளன. புதிய ஏற்பாடு இயேசுவின் சரித்திரத்தையும் கிறிஸ்தவ சபையின் ஆரம்பத்தையும் பற்றியுள்ளது.

வேதாகமம், மனிதனுக்குத் தேவனுடைய நற்செய்தியாக இருக்கிறது. அது நமக்குக் கூறுவது முழு உலகத்திற்கும் ஒரே ஒரு தேவன் தான் உண்டு. எல்லாம் அவராலேயே உருவாக்கப்பட்டது. குறிப்பிட்ட சிலருக்கு அவர் தம்மை வெளிப்படுத்தி, அவர்கள் கற்றுக்கொண்டவைகளை அவர்கள் எழுதினார்கள். பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு இரண்டும் வெவ்வேறு எழுத்தாளர்களால் எழுதப்பட்டு பல எண்ணிக்கையுள்ள 'புத்தகங்கள்' அடங்கியவைகளாகும். இந்த எழுத்தாளர்கள் தேவனால் ஏவப்பட்டு, தேவனுடைய வெளிப்பாட்டையும், அவருடைய வார்த்தையையும் உள்ளபடியே எழுதினார்கள். எனவே அது தேவனுடைய வார்த்தையாக உள்ளது. அது எழுத்தாளர்களின் சிந்தனையல்ல என்றும், தேவனுடைய சரியான எண்ணங்கள் ஆகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

பழைய ஏற்பாடு இயேசுவின் கிரியைகளுக்குப் பின்னணியாக அளிக்கப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் கிரியைகளைக் குறித்த அநேக தீர்க்கதரிசிகளின் முன்

குறிப்புகளைக் கொண்டதாக உள்ளது. அவரை மேசியா என்றும் அழைத்துள்ளது. கிறிஸ்து மற்றும் மேசியா என்ற இரு வார்த்தைகளின் அர்த்தமும் ஒன்றே. "அவர் ராஜாவாக அபிஷேகம் பண்ணும்படி நியமிக்கப்பட்டவர்." புதிய ஏற்பாட்டில் 'இயேசுவே மேசியா' என்ற பழைய ஏற்பாட்டின் வெளிப்பாடு முன்பே கூறப்பட்டுள்ளது. அதனால் தான் அவர் அடிக்கடி இயேசு கிறிஸ்து என்றும், சில வேளைகளில் கிறிஸ்து என்று மட்டும் குறிக்கப்பட்டுள்ளார்.

## வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட குமாரன்

வேதத்தில் நமக்கு சொல்லப்பட்டுள்ள முதல் வார்த்தை: *"ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார்"* (ஆதியாகமம் 1:1).

தேவன் அடுத்ததாக உயிருள்ளவைகள் அனைத்தையும் சிருஷ்டித்தார். கடைசியாக ஆணும் பெண்ணுமாக மனிதனைச் சிருஷ்டித்தார். அவர்களே ஆதாம் மற்றும் ஏவாள். முதல் மனிதனிடத்திலும், மனுஷியிடத்திலும் அவர் எல்லாவற்றையும் ஒப்புக் கொடுத்தார். ஆனால் தமக்குக் கீழ்ப்படியாமல் போனால் அவர்கள் சாவார்கள் என்று அவர்களிடம் கூறினார்.

ஆதாம் ஏவாளின் கீழ்ப்படியாமை துக்ககரமானது. ஏனெனில், கீழ்ப்படியாமையைத் தேவன் 'பாவம்' என்று சொல்கிறார். பாவத்தின் விளைவாக மனிதனுக்கு மரணம் (சாவு) என்னும் தண்டனை விதிக்கப்பட்டது. இருந்த போதிலும் தேவன் அவர்களோடு ஒரு உடன்படிக்கை பண்ணினார். பாவத்தையும் மரணத்தையும் எடுத்துப்போட ஸ்திரீயின் வித்திலிருந்து வரும் ஒருவரின் மூலம் இதற்குத் தீர்வு உண்டாக்குவேன் என்றார்.

தேவன் ஆதாமுக்கும், ஏவாளுக்கும் உடனடியாக மரணத்தைக் கொடுக்கவில்லை. ஆனால் சாவில்லாதிருந்த



அவர்கள் சாவுக் கேதுவானவர்களாகவும், முடிவில் மரணத்துக்கென்றும் நிர்ணயிக்கப்பட்டார்கள். அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகள் அனைவரும், எல்லா மனுக்குலமும் அவர்களின் சந்ததியாய் விளங்குகின்றனர். அச்சந்ததியில் பிறந்த ஒவ்வொருவரும் பிறவியிலேயே அவர்களைப் போல பாவம் செய்கிறவர்களாக, மரணத்துக் கேதுவான பாவ சோதனைக்குட்பட்டவர்களாக காணப்படுகிறார்கள். எனவே ஆதாம் ஏவாளுடைய சந்ததியில் பிறந்த ஒவ்வொருவரும் மரணத்துக்கேதுவான அழிவுக்கு நிர்ணயிக்கப்பட்டனர்.

அநேக தலைமுறைகளுக்குப் பிறகு, அபூர்வமான உண்மையுள்ள மனிதனாக ஆபிரகாம் தோன்றினான். தேவன் ஆபிரகாமின் விசுவாசத்தை மெச்சி, அவனோடுகூட ஒரு உடன்படிக்கையைச் செய்தார். இவ்வுடன்படிக்கை அநேக பரிசுத்த வாக்குத்தத்தங்கள் அடங்கியதாக இருந்தது.

1. தேவன் தாம் வாக்களித்தபடி இம்மனிதனையும், அவன் சந்ததியையும் வேறு பிரித்து, விசேஷமான வகையில் அவர்களுடன் இணைந்து கிரியை செய்வதாக இருந்தார்.

2. அவர், ஒரு குறிப்பிட்ட குமாரன் தோன்றி ஆளுகை செய்வார் என வாக்களித்தார்.

3. அவர் தனிப்பட்ட வகையில் ஆபிரகாமுக்கு வாக்களித்ததாவது, இந்த விசேஷித்த குமாரனும் மற்றும் ஆபிரகாமின் மற்ற எல்லாச் சந்ததியினரும், ஆபிரகாம் வாழ்ந்த தேசத்தை என்றென்றைக்கும் சுதந்தரித்துக் கொள்வார்கள் என்பதே ஆகும்.

4. அவர், முழு உலகத்தையும் ஆபிரகாம் மூலமாக ஆசீர்வதிப்பேன் என வாக்களித்தார்.

5. மேலும் அவர், ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததியினருக்கும் சதாகாலங்களிலும் தேவனாயிருப்பேன் என வாக்களித்தார்.

ஆபிகாமுக்கு வாக்களிக்கப்பட்ட விசேஷித்த குமாரனும் ஏவாளுக்கு வாக்களிக்கப்பட்ட விசேஷித்த குமாரனும் ஒருவரே. இக்குமாரன் மூலமாக முழு உலகத்துக்கும் ஆசீர்வாதம் உண்டாகும். ஒருவன் நீடித்த நாட்கள் அத்தேசத்தை சுதந்தரித்துக்கொள்ள வேண்டுமெனில், அவன் நீடித்த நாட்கள் வாழ்ந்தாக வேண்டும். எனவே ஆபிரகாமுக்கும் விசேஷித்த குமாரனுக்கும் மற்றும் அவருடைய சந்ததியினருக்கும் அழியாமை என்பது வாக்குறுதி செய்யப்பட்டது. தேவன் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் கூறியதுபோல, இவ்வாக்குறுதிகள் எல்லாம் நிறைவேற வேண்டுமெனில், இந்த விசேஷமான குமாரன் பாவம் மற்றும் மரணத்தின் பிரச்சனைகளைத் தீர்த்தாக வேண்டும்.

ஆபிரகாமின் குமாரன் ஈசாக்கும், ஈசாக்கின் குமாரன் யாக்கோபும் விசுவாசமுள்ளவர்களா யிருந்தபடியால், தேவன் தம்முடைய வாக்குத்தத்தங்களை இவர்களோடும் செய்துக் கொண்டார். யாக்கோபு இஸ்ரவேல் என அழைக்கப்பட்டான். அவனுக்குப் பன்னிரெண்டு குமாரர்கள் இருந்தார்கள். இவர்களுக்குப் பிறந்தவர்கள் பின்னால் இஸ்ரவேலர் என அழைக்கப்பட்டனர். இவர்களுக்கு மற்றொரு பெயர் “யூதர்கள்” என்பதாகும்.

மறுபடியும் பல தலைமுறைகளுக்குப் பின்பு பிறந்த விசுவாசமுள்ள ஒரு மனிதன் தேவனுடைய இருதயத்துக்கு ஏற்றவனாகக் காணப்பட்டான். அவன் பெயர் தாவீது. தேவன் அவனை இஸ்ரவேல் தேசத்தின் மேல் ராஜாவாக்கி, இன்னும் கூடுதலான வாக்குத்தத்தங்களையும் அவனுடன் செய்து கொண்டார். தேவன் வாக்களித்த ஸ்திரீயின் வித்தாகிய விசேஷித்த குமாரனும், ஆபிரகாமின் விசேஷித்த குமாரனுமானவர் தாவீதின் சந்ததியாக (வாரிசாக) இருப்பார் என்று வாக்களித்தார். இக்குமாரன் ஒரு பெரிய ராஜாவாக இஸ்ரவேல் ஜனத்தை என்றென்றைக்கும் ஆளுகை செய்வார்



என்றும் வாக்களித்தார். தேவன் தம்முடைய ஜனங்களை ஆளுகை செய்ய ராஜாக்களை நியமித்த போது அபிஷேக முறைமையின்படி தெரிந்தெடுத்தார். எண்ணெய் அவர்கள் தலையில் ஊற்றி அவர்களை ராஜாக்களாக அபிஷேகஞ் செய்து தெரிந்து கொண்டார். ஆகவே அவ்வாக்குத்தத்தத்தின் ராஜா “*அபிஷேகிக்கப்பட்டவர்*” எனப்படுகிறார். அவரே மேசியா அல்லது கிறிஸ்து எனப்படுகிறார்.

## குமாரன் பிறந்துள்ளார்

புதிய ஏற்பாடானது இவ்வார்த்தைகளுடன் தொடங்கியுள்ளது. “*ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசு கிறிஸ்துவினுடைய வம்ச வரலாறு*” மத்தேயு **1:1**).

இயேசு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட குமாரனானவர். அவரே தேவனால் அபிஷேகிக்கப்பட்டு, தெரிந்துக் கொள்ளப்பட்ட ராஜா. இவர்தாமே பாவத்தையும் மரணத்தையும் வென்று முழு உலகத்திற்கும் ஆசீர்வாதத்தைக் கொண்டு வருபவர்.

இயேசுவானவர் மரியாள் மூலமாக ஆபிரகாமுக்கும், தாவீதுக்கும் சந்ததியாக வந்தார். அவள் கன்னிகையாக இருக்கையில், ஒரு தேவதூதன் (ஒரு தெய்வீக செய்தியாளர்) அவளிடத்தில் அனுப்பப்பட்டு, அவள் மேசியாவின் தாயாகப் போகிறாள் என அறிவிக்கப்பட்டாள். அவள் திருமணமாகாத கன்னியானபடியால், இது எப்படி ஆகுமென ஆச்சரியப்பட்டாள். தேவதூதன், தேவனுடைய வல்லமை அவள் மேல் இறங்கி ஒரு குமாரனை அவள் கர்ப்பந்தரிப்பதால் அக்குழந்தை தேவகுமாரன் என்றும், மரியாளின் மகன் என்றும் அழைக்கப்படுவார், என்று அறிவித்தான். அவருடைய நாமம் (பெயர்) “இயேசு” அதாவது “இரட்சகர்” என்பது பொருளாகும். ஏனெனில், அவர் தம்முடைய ஜனங்களைப் பாவத்தினின்று

இரட்சித்து, அவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இராஜாவாக விளங்குவார்.

சில மதங்கள் தங்களுடைய தேவர்கள் சாவுக்கேதுவான நரருடன் பாலுறவு வைத்துக் கொண்டதாக தெரிவிக்கின்றன. இயேசுவின் பிறப்போ அப்படிப்பட்ட சம்பந்தங்களுக்கு அப்பாற்பட்டது. ஆதிமுதல் மனிதனில் ஜீவனை உண்டாக்கிய தேவன் தம்முடைய குமாரனை மரியாளின் வயிற்றில் கர்ப்பந்தரிக்கவஞ் செய்தார். இயேசு உண்மையில் தேவகுமாரனாகவும், மரியாளின் மகனாகவும் பரிசுத்த ஆவியின் வல்லமையினால் நிறைந்தவராக, மரியாளின் வயிற்றில் அதிசயமான சிருஷ்டிகராகிய தேவன் தாமே உருவாக்கினார்.

தேவதூதன் சொன்னபடியே குறித்த காலத்தில் குமாரன் பிறந்தார். ஒரு கூட்ட தேவதூதர்கள் இந்த சந்தோஷமான செய்தியை பிரஸ்தாபித்தார்கள். இந்நிகழ்ச்சியே மனித வரலாற்றின் மிக முக்கியமான தொடக்கமாகும். இயேசு என்னும் மனிதன் மூலம் கிரியை செய்து தேவன் இம்மனுகுலத்திற்கு இரட்சிப்பைக் கொடுப்பதாக இருந்தார்.

மரியாள் யோசேப்பு என்னும் மனிதனுக்கு திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டிருந்தாள். யோசேப்பு மரியாளை மணந்து கொண்ட பிறகு அவர்கள் இருவரும் இயேசுவையும், தங்களுடைய தாம்பத்ய வாழ்க்கையில் பிறந்த மற்ற பிள்ளைகளையும் சாதாரண வழியில் வளர்த்தார்கள். யோசேப்பு ஒரு தச்சனாக இருந்தபடியால் இயேசுவும் அத்தொழிலைக் கற்றுப் பெரியவராக வளர்ந்தார். மேலும், அவர் தாம் யார் என்பதைத் தமது தாயார் மூலமாகவும், எபிரேய வேதவாக்கியங்கள் மூலமாகவும் அறிந்து கொண்டார்.

இயேசு தமது முப்பதாவது வயதில் மிகப்பெரிய கிரியைகள் செய்ய ஆரம்பித்தார்.



## போதகரான இயேசு

நாம் மேலே வாசித்தது போல இயேசுவானவர் அபிஷேகிக்கப்பட்ட மேசியா ஆவார். ஆனால் அவர் முற்காலத்தில் ராஜாக்கள் அபிஷேகம் பெற்றது போல எண்ணெயினால் அபிஷேகிக்கப்படவில்லை. தேவன் பரிசுத்த ஆவியாகிய தம்முடைய வல்லமையால் இயேசுவை அபிஷேகித்தார். இயேசு சகல இயற்கை சக்திகள் மேலும் வல்லமை பெற்றார். அவர் அவ்வல்லமையைப் பயன்படுத்தி வியாதியுள்ளவர்களையும் முடவர்களையும் குணமாக்கி, மற்ற அநேக அற்புதங்களைச் செய்து, தாம் தேவகுமாரன் என்பதை நிரூபித்தார்.

இயேசு ஏறக்குறைய மூன்றரை ஆண்டுகாலம் யூதரின் ஊர்களிலும், பட்டி தொட்டிகளிலும், போதித்து வந்தார். ஜனத்திரளான ஆண்களும், பெண்களும், இயேசுவைப் பின்பற்றினார்கள். சிலர் ஆர்வத்தினிமித்தம் அவரைப் பின்பற்றினர், ஆனால் மற்றவர்கள் அவருடைய சீஷர்களாக அவரைப் பின்பற்றினர். அவர்களில் இயேசு பன்னிரெண்டு பேரை மாத்திரம் தம்முடன் கிரியைச் செய்யும்படி தெரிந்து கொண்டார். அவர்களே பிற்காலத்தில் கிறிஸ்தவ சபைகளின் தலைவர்களானார்கள்.

இயேசு உவமைகளின் மூலம் போதிப்பதை ஒரு முக்கிய போதனா முறையாகக் கையாண்டார். அப்போதனையில் நீதி போதனைகள் காணப்பட்டன. அவைகள் எல்லாம் அன்றாட வாழ்க்கை நடைமுறைகளான விவசாயம் அல்லது திருமண ஏற்பாடு நிகழ்ச்சிகளை ஆதாரமாகக் கொண்டவைகளாக இருந்தன. இம்முறையான போதனை சில மனிதர்கள் அவரைப் பின்பற்றுவதிலிருந்து தடைபண்ணியது. அவர் என்ன செய்கிறார் என்பதை அறிந்து கொள்ளும் வாஞ்சை யற்றவர்களாகக் காணப்பட்டார்கள். ஆனால் அநேகருக்கு

அவருடைய போதனைகள் அதிகாரம் கொண்டவைகளாக காணப்பட்டன. அவர்களுக்கு விளங்காதபோது, அவர்கள் இயேசுவிடம் வந்து, அவர் பேசுகிறது இன்னதென்று கேட்டபோது, அதை அவர் அவர்களுக்கு விளக்கினார். இவ்வாறாக, உண்மையான சீஷர்கள் அக்கூட்டத்தில் தனித்து காணப்பட்டனர்.

இயேசுவின் போதனைகள் அவர் தம்மைப் பின்பற்றுகிறவர்கள் ஒழுக்கமுள்ளவர்களாக இருக்கும்படி விரும்பினது. பெரிய சவாலாக இருந்தன. அக்கால மதத் தலைவர்கள் தேவனுடைய வார்த்தைகளைக் களங்கப்படுத்தி, தங்களுடைய சொந்தப் பாரம்பரியங்களைப் போதித்து வந்ததை இயேசு கண்டித்தார். தேவனுக்கு சத்தியம் மிகமுக்கியம் என்பதை இயேசு விளக்கிவந்தார். ஒரு உண்மையான தேவன் தம்முடைய ஜனங்கள் தம்மை அறிந்துகொள்ளவும், கீழ்ப்படியவும், தம்மண்டை வந்துச்சேரவும் வலியுறுத்துகிறார். தேவனை அறிந்துக் கொள்ளக்கூடிய வழி மனிதனின் மனதளவில் மாத்திரம் அல்ல. அது தேவனால் வெளிப்படுத்தப்படுகிறது. யார் அவருடைய வழியில் நடக்கிறார்களோ, அவர்களை மாத்திரம் அங்கீகரிக்கிறார். இயேசுவானவர் தேவனிடத்திலிருந்து தேவச்செய்தியை மாத்திரம் கொண்டுவந்தார். தத்துவங்களை அல்ல. நாமனைவரும் அச்செய்திகளுக்குச் செவிசாய்க்க வேண்டுமென அவர் போதித்தார்.

இயேசுவின் போதனைகள் இப்படிப்பட்ட ஓர் சிறிய புத்தகத்தில் போதுமான அளவு அடக்க முடியாது. அவருடையப் போதனைகளைக் கற்றுக் கொள்ள புதிய ஏற்பாட்டை வாசிப்பது அவசியம். அப்படி செய்யும் பொழுது, 2000 ஆண்டுகளுக்கு முன்பு அவருடைய போதனைகள் ஏற்றுக்கொள்ளத் தக்கதாகவும், வசீகரிக்கிறதாகவும் சரியானதாகவும் இருந்ததைக் காணமுடியும்.



அவருடைய போதனையில் சில அடிப்படை கொள்கைகளாவன:

1. சிருஷ்டிகரான ஒரேதேவன், அவருடைய பிள்ளைகளாக நம்மை நேசிக்கிறவர். அவருடைய அன்பினால், அவரை நாம் ‘பிதா’ என்று திருப்பி அழைக்க முடியும். ஒவ்வொருவரும் அவரை அறிந்து, அவரோடு கூட நெருங்கிய உறவு வைத்துக் கொள்ள அவர் விரும்புகிறார். (பார்க்க மத்தேயு 5:45, யோவான் 17:3, அப்போஸ்தலர் 14:15-17, அப்போஸ்தலர் 17:23-31).

2. தேவனுடைய அன்பின் பிரதிபலிப்பாக, நாம் பிறரையும் நேசிக்க வேண்டுமென அவர் விரும்புகிறார். நீங்கள் ஏற்றுக் கொள்ள இயேசு கூறிய பொன்மொழி என்னவென்றால், *“மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்”* (மத்தேயு 7:12). மேலும் இயேசு சொன்னது, *“உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக”* (மத்தேயு 22:39). நம்முடைய சத்துருக்களையும் நாம் நேசிப்பது அவசியம் என்று கூறினார் (மத்தேயு 5:44). இயேசுவின் அடிப்படை போதனைகளான இவைகள், ஒவ்வொரு உண்மையான கிறிஸ்தவனின் ஜீவியத்திலும் அவசியம் இருக்க வேண்டும். (பார்க்க கலாத்தியர் 5:17).

3. சரி எது, தவறு எது என்பதைத் தேவன் நமக்குச் சொல்லியிருக்கிறார். தவறு செய்தால் அது பாவம், அதன் தண்டனை மரணம், தவறான நடத்தைகளாவன: கொலை, திருடு, பொய், விபசாரம், பிறரை வஞ்சிப்பது, தீங்கு செய்தல், சண்டை, பிறர்மேல் அதிகாரம் செலுத்த நாடுதல். சரியானவைகளாவன: நேர்மை, பிறரில் அக்கறை, உண்மை பேசுதல், குடும்ப வாழ்வில் உண்மை, பிறரிடம் தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொள்ளுதல். (பார்க்க எபேசியர் 5:3-7 1. கொரிந்தியர் 7:9-11, கலாத்தியர் 5:19-20).

4. கணக்கொப்புவிக்கும் நாள் ஒன்று வரும். அதில் மக்கள் வாழ்ந்த வகையில் நியாயத் தீர்ப்பு பெறுவார்கள். இயேசுவின் போதனைகளை ஏற்க மறுத்தவர்களோ, தண்டனையாக நித்திய மரணம் அடைவார்கள். இயேசுவைச் சொந்தமாக்கி கொண்டு, உண்மையாய் அவரைப் பின் தொடர்ந்தவர்களுக்கு நித்திய ஜீவன் அளிக்கப்படும் (பார்க்க யோவான் 5:28-29 2.கொரிந்தியர் 5:9-10).

**பாவ நிவாரண பலி**

மரணமென்னும் தோஷத்தினால் மனிதன் நாசமாகி உள்ளான். நாம் பாவத்தில் முன்னேறிச் செல்வதால் நாம் மரிக்கக் கூடியவர்கள். பாவத்தை விட்டு விலகி, நன்மை செய்ய தேவன் ஆணையிட்டுள்ளார். ஆனால், நாம் பலவீனமானவர்கள். நாம் பூரணமாகாதவர்கள். தேவன் உறுதியாய் கூறுவது, *"பாவத்தின் சம்பளம் மரணம்"* (ரோமர் 6:23). ஆகையால் நாம் அழிவுக்கென்று நியமிக்கப்பட்டவர்கள். நாம் இந்த நிபந்தனையை மனதில் கொண்டு நம்முடைய ஜீவியத்தின் நம்பிக்கையைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

தேவன் மிகவும் நீதியானவர் என்றாலும் அவர் இரக்கமுள்ளவர். பாவம் மற்றும் மரணத்தினின்று நம்மை விடுவிக்க இயேசு தேவனால் அனுப்பப்பட்டார். இயேசு ஒரு போதும் பாவமில்லாதவராக இருந்தார். நம்மைப் போலவே அவரும் பாவ சோதனைகளுக்குட்பட்டார். ஆனால் அவர் தேவனுடைய குமாரனாயிருந்து பாவ உணர்ச்சிகளை எதிர்கொள்ளும் பலமுள்ளவராயிருந்தார். இயேசு பரிபூரணமான, பாவமில்லாத நீதிமானாக இருந்தார். ஆனால் அவர் நம்மைப் போல மனிதனாக இருந்த படியால், அடிக்கடி பாவசோதனைக்குட்பட்டார். இந்த பாவ உணர்ச்சிக்கு அடிமையாவது சில நேரங்களில் ''பிசாசு'' என்று



சொல்லப்படுகிறது. எனவே இயேசு நம்மைப் போல மனிதனாக இருந்தார்.

பழைய ஏற்பாட்டில், இரத்தஞ் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை என்று, மிருகங்களைப் பலியிடுவதே தேவ நியமனத்தின் அடையாளமாயிருந்தது. இந்த காணிக்கையான பலியின் மூலம் மனிதன் மரணத்துக்குப் பாத்திரராக இருப்பதால், நீதியுள்ள தேவன் நமக்கு மரணத்தைக் கட்டளையிட்டது, நியாயமாயிற்று. இரக்கமுள்ள தேவன், நம்முடைய பாவத்தின் பலியின் மூலம் நம்மை நீதிமான்களாகக் காணும்படி வழி உண்டாக்கினார்.

மிருகத்தின் பலி, மனிதனின் பாவத்தை நீக்க சக்தியுள்ளது அல்ல. ஆனால், பரிபூரணமான மனிதனாகிய இயேசுவினால் அது கூடும். ஆதிமுதல் தேவனுடைய திட்டத்தின்படி அவருடைய குமாரன் பாவத்தின் பரிபூரண பலியாகி, இந்த மிருகத்தின் பலி, இயேசு பலியாவதற்கு முன்னுதாரணமாகும்படி தேவன் விரும்பினார்.

இயேசு, அவருடைய சீடர்களில் ஒருவனால் காட்டிக்கொடுக்கப்பட்டு, யூத மதத்தலைவர்கள் அடங்கிய ஆலோசனை சங்கத்தால் மரணதண்டனை விதிக்கப்பட்டார். அவர்கள் அவர் மேல் பொறாமை கொண்டு, தேவனுடைய திட்டத்தின் பகுதியாக, தங்களில் உணர்வில்லாதவர்களாய் நடந்துக்கொண்டார்கள். அந்த தலைவர்கள் கேட்டுக்கொண்டபடி ரோம ராஜ்ஜியத்தின் அதிபதியிடம் இயேசுவை சிலுவை மரணத்துக்கு ஒப்புக்கொடுத்தனர். அது குற்றவாளிகளுக்குப் பொதுவாக அந்த காலத்தில் விதிக்கப்பட்ட தண்டனையாகும். இந்த தண்டனையின்படி, ஒரு கம்பத்தில் ஆணிகளால் அடிக்கப்பட்டு அல்லது கட்டப்பட்டு, குற்றவாளி மரிக்கும்படி விடப்பட்டான். சில நேரங்களில் குறுக்குச் சட்டம் இருந்ததா, இல்லையா என்று நமக்குத் தெரியாது. ஆனால்

நாம் அறிந்து கொண்டது, அவர் கைகளிலும், கால்களிலும் ஆணிகள் அடிக்கப்பட்டு, அவர் சாகும் வரையில் தொங்கிக் கொண்டிருந்தார் என்பதாகும்.

தேவன் ஜனங்களைப் பாவத்திலிருந்து விடுவிக்க இந்த பயங்கர (கொடூரமான) சாவு எப்படி உதவக்கூடும் என்று அநேக ஜனங்களால் புரிந்து கொள்ள முடிவதில்லை. புதிய ஏற்பாட்டில் நமக்குக் கூறப்பட்டுள்ளது என்னவெனில், ஆண்களும், பெண்களும் இயேசுவின் மரணத்தோடு ஈடுபடும் போது அவருடைய தியாகமானது (பலி) மனிதனுடைய பாவங்களைக் கழுவுகிறது. இவ்வாறு தேவனிடத்திலிருந்து நாம் பாவமன்னிப்பைப் பெறுகிறோம். இயேசுவின் நீதியையும் நமது விசுவாசத்தையும் கொண்டு நம்மை நீதிமான்களாகத் தேவன் காண்கிறார்.

இயேசு வெறுமையாக மரித்திருந்தால் இந்த இரட்சிப்பு அர்த்தமற்றதாக இருந்திருக்கும். ஆனால் இயேசு மரணத்தில் நிலைக்கவில்லை.

## உயிர்த்தெழுதல்

பாவத்தின் சம்பளம் மரணம் (ரோமர் **6:23**) நீதிக்கும், சம்பளம் மரணமாக இருந்தால் அது சரியல்ல. எனினும், இயேசுவின் மரணம் சரியானதாக இருந்தது. ஏனெனில் அவர் பாவ சரீரத்தில் ஜீவித்தபடியால் பிசாசின் (பாவ) தூண்டுதலுக்கு ஆளானார். ஆனால், அவர் ஒருபோதும் பாவஞ்செய்யாதிருந்தபடியால் பாவமில்லாதவர், பாவத்தை அழிக்கக் கூடியவர். ஆகையால் அவர் மரணத்திலிருந்து தேவனால் உயிரோடு எழுப்பப்பட்டார். இதுவே உயிர்த்தெழுதல் என்று சொல்லப்படுகிறது. அவருடைய மரணத்தின் மூலம் பாவத் தூண்டுதல் சதாகால முடிவானது. இயேசு உயிரித்தெழுந்த போது, அவர் பாவம் செய்வதற்கானத் தூண்டுதலால் பின்பு ஒருக்காலும் சோதிக்கப்படவில்லை. அவர்



அழிவின் சரீரத்திலும் இல்லை. அவர் அழிவில்லாத சரீரத்தில் ஜீவிக்கிறபடியால் இனி அவர் திரும்ப மரிப்பதில்லை.

இந்த மரணமும், உயிர்த்தெழுதலும் இயேசுவினால் கொடுக்கப்பட்ட மிகப்பெரிய வெற்றி. மனித வரலாற்றில் முதன் முறையாக, சாவை அவர் தோற்கடித்தார். இயேசு தமது வாழ்நாட்களெல்லாம் பாவத்தைத் தோற்கடித்தார். இப்பொழுது பாவத்தூண்டுதல் அழிக்கப்பட்டு, அவர் சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறார்.

இந்த உயிர்த்தெழுதலினால், இயேசு தேவனுடைய குமாரன் என்பதற்கு மிகப்பெரிய அடையாளமாய் அமைந்ததுடன், அவருடைய போதனைகள் உண்மை என்று நிரூபிக்கப்பட்டது. நம்மெல்லாரின் நம்பிக்கைக்கும் இது வழி காட்டுதலானது. தேவனுடைய கிருபையினால் இயேசு பாவத்தையும், சாவையும் வென்றார். அவருடைய வெற்றி நம்மெல்லோருக்கும் வெற்றியானது.

ஒரு நபர் விசுவாசித்து தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெறும் போது கிறிஸ்தவனாகிறான். இது சடங்கு மாத்திரம் அல்ல. இது முன்னால் நாம் பேசினவைகளுடன் நம்மைச் சம்பந்தப்படுத்துகிறது.

**1.** ஞானஸ்நானமானது அடக்கம் பண்ணப்பட்டு, உயிரோடு எழுந்ததற்கு அடையாளம். நாம் அவரோடு மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிரோடு எழுந்து புதிய ஜீவனாய் மாறியதன் செய்முறையின் மறை பொருளாக விளங்குகிறது. இருந்தாலும், நாம் இன்னும் பாவ உணர்சிக்குள்ளாக்கப் பட்டாலும் நாம் அதை அடையாளமாக அடக்கம் செய்துள்ளோம். நாம் இன்னும் மரிக்கக் கூடியவர்களாக இருந்தாலும் நாம் இயேசு கிறிஸ்துவோடு கூட புதிய ஜீவியத்தை ஆரம்பித்து அவரைச் சேவிக்க முற்படுகிறோம்.

*"நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும் படிக்கு"* (ரோமர் 6:4) ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம்.

2. ஞானஸ்நானமானது நாம் மரணத்துக்குப் பாத்திரனாகக் கூடிய ஒரு முத்திரை. இரட்சிப்பு நமக்குத் தேவை என்பதை ஒப்புக்கொண்டு, பாவம், மரணம் இவற்றிலிருந்து நம்மை விடுவிக்க இயேசுவின் பலி நமக்குச் சிறந்த வழி என்பதை விசுவாசிக்க வேண்டும்.

*''விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்''* (மாற்கு 16:16).

3. நம்முடைய ஞானஸ்நானத்தின் மூலம் தேவனில் நாம் வைக்கும் விசுவாசத்தையும் இரட்சிப்பு என்று அவருடைய காணிக்கையையும் நாம் அறிக்கையிடுகிறோம். நம்முடைய விசுவாசத்தைக் கொண்டு, தேவன் தமது கிருபையினால் நம்மை நீதிமான்கள் ஆக்குகிறார். நம்முடைய பாவங்கள் கழுவப்பட்டு, தண்ணீருக்குள் மூழ்குவதைத் தேவனுடைய பார்வையிலே நாம் சுத்தமாக்கப்பட்டோம் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

*''ஞானஸ்நானத்திலே அவரோடே கூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாக.... அவரோடே கூட உயிர்ப்பித்து, அக்கிரமங்கள் எல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்தார்''* (கொலோசெயர் 2:12-13).

4. ஞானஸ்நானமென்னும் அடையாளத்தின் மூலம் நம்முடைய நித்திய மரணத்திலிருந்து தேவன் நம்மைப் பாதுகாக்கிறார் என்ற நிச்சயம் நமக்குக் கிடைக்கிறது. இயேசுவைப் போல நாமும் மரணத்திலிருந்து உயிரோடு எழுப்பப்பட்டு, அதற்குப்பின் மரணமில்லாமல் வாழ்வோம்.

*''ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில்* (ஞானஸ்நானத்தில்) *நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்''* (ரோமர் 6:5).



## தேவனுக்கும் மனிதனுக்கும் மத்தியஸ்தர்

இயேசு மரணத்திலிருந்து உயிரோடு எழுப்பப்பட்ட பிறகு, அவருடைய சீஷர்களுடன் சுமார் ஆறு வாரங்கள் அவர் செலவழித்தார். அவர் தம்மை எல்லோருக்கும் வெளிப்படுத்தவில்லை. தமது சாட்சிகளாகத் தாம் தெரிந்து கொண்டவர்களுக்கு மாத்திரம் தம்மை வெளிப்படுத்தினார். அப்போது ஏறக்குறைய 500 ஜனங்கள் உணர்ச்சித் துடிப்போடு, பெரிய கூட்டமாக அவரை உயிரோடு கண்டார்கள்.

இரட்சிப்பென்னும் சுவிசேஷத்தை (நற்செய்தி) எல்லாருக்கும் அறிவிக்க வேண்டியது அவசியம் என்று இயேசு தமது சீஷர்களுக்குப் போதித்தார். அவர், தேவன் அனுப்பும் வல்லமையாகிய பரிசுத்த ஆவியைப் பெற்று, உலகெங்கும் தேவனுடைய நற்செய்தியை எடுத்துச் செல்லுவதற்கு ஆதாரமாக இருக்கும் என்றார்.

பிறகு இயேசு பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதை அவருடைய சீஷர்கள் பார்த்தார்கள். இயேசு இப்பொழுது அவருடைய பிதாவாகிய தேவனோடு பரலோகத்தில் இருக்கிறார். அவர் தமது போதனையின் கடமையைத் தம்மைப் பின்பற்றுபவர்களிடம் விட்டுச் சென்றார். இப்பொழுது அவருடைய கடமை என்னவெனில், ஆசாரியரின் பணியாகும்.

அந்த ஆசாரியர் மனிதக் குலத்திற்கும், தேவனுக்குமிடையே மத்தியஸ்தனாக விளங்கிக் கொண்டிருக்கிறார். விசேஷமான விதத்தில், ஆசாரியனின் வேலை, பலியின் காணிக்கையை தேவனிடம் ஆராதிக்க வருகிறவர்களுக்காகச் செலுத்துவது ஆகும். பழைய ஏற்பாட்டுக் காலத்தில், மிருகத்தின் காணிக்கையை

ஆசாரியர்கள் பலியாகக் கொடுத்தனர். அதையே மிகச்சிறந்த பலியின் முன்னோட்டமாக நாம் பார்க்கலாம். அதே வழியில், மிகப் பெரிய ஆசாரியனாகிய இயேசு கிறிஸ்து மாதிரியான அந்த ஆசாரியனாக இருந்தார்.

இயேசு இன்று நமது வழக்கறிஞர், தேவனுக்கு முன்பாக நம்முடைய சார்பாக ஆஜராகிறார். நம்முடைய பாவம், மற்றும் அழிவுள்ள தன்மை தேவனிடத்திலிருந்து நம்மைப் பிரிக்கிறது. நம்மைத் தேவனோடு சமாதானப்படுத்த இயேசு இதைச் செய்கிறார். ஏனென்றால் தேவன் நம்மை நேசிக்கிறார். மற்றும் இயேசு பரிபூரணமான வழிக்கறிஞர். இதனால் நாம் தேவனிடம் அங்கீகாரம் பெறுகிறோம். இயேசு தமது நீதியின் மூலம் நம்முடைய பிரதிநிதியாக இருந்து நம்மை இரட்சிக்க அனுமதி பெற்றிருக்கிறார்.

*''தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே''* (1. தீமோத்தேயு 2:5).

## கிறிஸ்தவத்தைப் பரப்புதல்

இயேசு பிதாவினிடத்திற்கு ஏறிச்சென்ற பிறகு, சீடர்கள் அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, நற்செய்தியைப் பரப்பினார்கள். அதில் முக்கிய சீஷர்கள் "அப்போஸ்தலர்" என்றழைக்கப்பட்டனர். அதாவது குறிப்பிட்ட பணியைச் செய்ய *அனுப்பப்பட்டவர்கள்* என்றர்த்தமாகும். இயேசு குறிப்பாகத் தமது வேலையைத் தொடர்ந்து செய்ய அவர்களை அனுப்பினார்.

இயேசு மரிப்பதற்கு முன்பு, இஸ்ரேல் தேசத்தின் எல்லையை ஒரு போதும் விட்டு விலகவில்லை, ஆனால் இரட்சிப்பு யூதருக்கு மாத்திரம் வருவது தேவனுடைய ஒரே நோக்கமல்ல. ஏனென்றால் ஆபிரகாம் அவ்வளவு விசுவாசமாயிருந்தபடியால் தேவன் யூதக்குலத்தின் மூலமாக கிரியை செய்தார். ஆனால் இரட்சிப்பானது தேவனிடத்தில் சேருகிற ஒவ்வொருவருக்கும் இயேசுவினால் வருகிறது.



அப்போஸ்தலர்கள் ரோம சாம்ராஜ்யத்தின் எல்லா இடங்களுக்கும் சென்று, இயேசு கிறிஸ்துவின் இரட்சிப்பைப் பற்றி நற்செய்தியாக அறிவித்தார்கள். அவர்கள் பரிசுத்தாவியைப் பெற்றிருந்தபடியால் அந்த வல்லமையைக் கொண்டு இயேசுவைப் போல் அற்புத, அடையாளங்களைச் செய்தார்கள். அது வெறும் கட்டுக்கதை அல்ல என்பதை நிரூபித்தது. அவைகள் உயிர்த்தெழுதலின் சாட்சியாகவும், தேவன் மக்களை இரட்சிக்கிறார் என்பதற்குச் சாட்சியாகவும் விளங்கின.

மிகப்பெரிய எண்ணிக்கையுள்ள மக்கள் இந்த போதனைக்குக் கீழ்ப்படிந்தார்கள். பாவமன்னிப்புக்கென்று நற்செய்தியை நம்பி, ஞானஸ்நானம் பெற்றார்கள். இப்படி கிறிஸ்தவம் ஆரம்பமானது. விரைவில் எல்லா இடங்களிலும் திருச்சபைகள் உருவானது. ரோமப் பேரரசு இந்த புதிய மதத்தை விரும்பவில்லை. அவர்கள் அதை அரசியல் சம்பந்தமாக்கி, விரைவில் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினர். பல இடங்களில் அநேகர் சாவுக்குள்ளாக்கப்பட்டார்கள், ஆனால் நற்செய்தி தொடர்ந்து பரவிக்கொண்டேயிருந்தது.

புதிய விசுவாசிகள் சிலர் பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற அப்போஸ்தலர்களால் வழிநடத்தப் பட்டார்கள். ஆனால் வேறொருவராலும் அல்ல, அப்போஸ்தலர்கள் தவிர வேறொருவராலும் அந்த வல்லமையைப் பிறருக்குத் தொடர்ந்து கொடுக்கமுடியவில்லை. அப்போஸ்தலர்கள் கூறின செய்தியை ஏற்றுக் கொள்ள முடியாதவர்களால் அவர்கள் ஒவ்வொருவராகக் கொல்லப்பட்டார்கள். கடைசியில் பரிசுத்தாவியை நேரில் பெற்றிருந்த எல்லாரும் மரித்தார்கள். ஆனால் ஒரு புதிய, மிக முக்கியமான நிலையான வழியில் 'உண்மையான தேவனுடைய செய்தி' அறிவிக்கும்படி அளிக்கப்பட்டது.

அப்போஸ்தலர்களில் சிலர் தேவ ஆவியின் வல்லமையைப் பெற்று, தேவனால் ஏவப்பட்டு செய்திகள் எழுதினார்கள். அவர்கள் எழுதின செய்திகளில் இயேசுவின் வாழ்க்கைச் சம்பவங்களும், போதனைகளும் தான் அடங்கியுள்ளன. அப்போஸ்தலர்கள் செய்தது என்ன என்பதும் எழுதப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் போதனைகள் அடங்கியுள்ள வார்த்தைகளையும் அவர்கள் எழுதினார்கள். புதிய ஏற்பாடு என்று அது அழைக்கப்பட்டு, தேவனுடைய வார்த்தைகள் அதில் அடங்கியது.

*''வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்த்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாக இருக்கிறது''* (2.தீமோத்தேயு 3:16-17).

அப்போஸ்தலர்கள் இறந்தாலும், அவர்களால் எழுதப்பட்ட புதிய ஏற்பாடு கிட்டத்தட்ட 2000 ஆண்டுகளாக நமக்குத் தொடர்ந்து போதித்து வருகிறது.

## இயேசு திரும்பவும் வருவார்

இயேசுவானவர் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, அவரைப் பார்த்த சீஷர்களிடம் தேவ தூதர்கள் பேசினார்கள். தேவதூதர்கள் அவர்களுக்குச் சொன்னது:

*''உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்திற்கு எழுந்தருளிப் போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்''* (அப்போஸ்தலர் 1:11).



தேவனால் வாக்களிக்கப்பட்டது என்னவோ, அதையே இயேசு நிறைவேற்றினார். அவர் பாவம், மரணம் என்பவற்றை ஜெயித்து ஒவ்வொருவருக்கும் ஆசீர்வாதம் கொண்டுவர மூலகாரணமா யிருந்தார். ஆனால் அவர் இதுவரை நிறை வேற்றப்படாத வாக்குறுதியின் அரசனாகக் காத்திருக்கிறார்.

அநேக தீர்க்கதரிசிகள், புதிய ஏற்பாடு, பழைய ஏற்பாடு இரண்டிலும், மேசியா இந்த முழு உலகத்தையும் இராஜாவாக ஆளப்போகிறார், என்று நமக்குக் கூறியுள்ளனர். அவருடைய சீடர்களின் எதிர்பார்ப்பு இயேசு உடனடியாக அதை நிறைவேற்றுவார் என்றிருந்தாலும், அவைகள் நிறைவேற காலதாமதமாகும் என்றார் இயேசு. (பார்க்க அப்போஸ்தலர் 1:6-7).

அப்போஸ்தலர், இயேசு திரும்ப வந்து மீதியான வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவார் என்று போதித்தார்கள். வேதாகமம் நமக்குச் சொல்லுகிறபடி, அவர் திரும்ப வரும்பொழுது இயேசு அநேக காரியங்களைச் செய்வார்.

1. அவர் தமது தூதர்களை அனுப்பி, கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களை உயிரோடு எழுப்பி தம்மை பின்பற்றுகிற உயிரோடிருக்கிற நம்மோடு ஒன்று சேர்ப்பார். (பார்க்க. மத்தேயு 24: 31, 1. தெசலோனிக்கேயர் 4:16)

2. ஒன்று சேர்க்கப்பட்ட எல்லாரும் நியாயந்தீர்க்கப்படுவர். யார் உண்மையாய் கீழ்ப்படிந்து நடந்தார்களோ, யார் நடக்கவில்லை என்று இயேசுவின் வார்த்தை தீர்மானிக்கும். உண்மையாய் நடந்தவர்களுக்கு நித்திய ஜீவன் அளிக்கப்படும். உண்மையில்லாதவர்கள் ஆக்கினைத் தீர்ப்புக்குள்ளாக்கப்பட்டு, நித்தியத்துக்கும் மரிப்பார்கள். (பார்க்க. யோவான் 5:28-29, 2.தெசலோனிக்கேயர் 1:9).

3. ஒன்றான மெய் தேவனாகிய பிதாவின் சார்பாக இயேசு முழு உலகத்தையும் ஆளுவார். அனைவரும் அவரை

ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். தம்மை எதிர்க்கிறவர்களை அவர் ஜெயிப்பார். உலகம் முழுவதும் தேவனுடைய அறிவினாலும், அவருடைய மகிமையினாலும் நிறைந்திருக்கும். (பார்க்க. தானியேல் 7:14, வெளிப்படுத்தல் 5:10).

4. இராஜாவாக இயேசு முற்றிலும் நீதியோடு அரசாளுவார். அவருடைய ஆட்சியில் வஞ்சனை இருப்பதில்லை. துக்கம், யுத்தம், வியாதி, மரணம், இவையெல்லாம் குறைந்து நீங்கி ஒழிந்து போகும். பாவத்தின் ஆதாரங்கள் அனைத்தும் நீங்கும் வரை அவருடைய ராஜ்ஜியம் தொடரும். கடைசியில் சாவையும் அழித்துப் போடுவார். அதனுள் அவிசுவாசிகள் இருப்பதில்லை. இயேசுவானவர் தமது பிதாவிடம் ராஜ்ஜியத்தை ஒப்புக்கொடுப்பார். (பார்க்க. 1.கொரிந்தியர் 15:24-28, வெளிப்படுத்தல் 21:1-8).

இயேசு எப்பொழுது திரும்ப வருவார் என்று நாம் அறியோம் (பார்க்க. மாற்கு 13:32). ஆனால் இயேசுவானவர் நமக்குப் போதித்தபடி, அவருடைய வருகை எந்த நேரத்திலும் இருப்பதால் நாம் ஆயத்தமாயிருக்க வேண்டும்.

இயேசு அவருடைய வருகைக்கு முன் நடக்கும் அடையாளங்கள் சிலவற்றைக் கொடுத்துள்ளார். அநேக அடையாளங்கள் இப்பொழுது நடந்துக்கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். அவற்றுள் ஒன்று, யூத குல மக்கள் இஸ்ரேல் நாட்டிற்குத் திரும்பி வருகிறார்கள். இந்த அடையாளங்களைப் பார்க்கிற கிறிஸ்தவர்கள் இயேசுவின் வருகை மிக அருகில் உள்ளது என ஆனந்தகளிப்படைவார்கள். வாக்களிக்கப்பட்ட நித்திய ஜீவன் மிக அழகானது. வேதனை இல்லாதது, சமாதானமும் நீதியும் நிறைந்த ராஜ்யம் நிஜமாகக் காணப்படும்.

இயேசு உன்னைத் தமது சீடனாக அழைக்கிறார். அதைத் தாமதாகுமுன் இப்பொழுதே கேட்டு பின்பற்றிவா. அவர் உன்னிடத்தில் கேட்பது, பாவியாகிய நீ உன் பாவத்தை



அறிக்கையிட்டு உனக்குத் தேவையாயிருக்கிற இரட்சிப்பைப் பெற்றுக்கொள். அவர் உன்னிடத்தில் கேட்பது, அவர் சொல்லுவதைக் கவனித்து, உண்மையான தேவனைப் புரிந்து கொண்டு, ஜீவனுக்கு வழி நடத்தும் ஒரே வழியிலே நடப்பதே. முன்னே நடந்த பழைய வாழ்க்கையை விட்டு, அவருக்குக் கீழ்ப்படிந்து வாழும்படி அவர் உன்னை அழைக்கிறார். நித்திய ஜீவனைத் திடமாகப் பிடித்துக் கொள்ளவும் அதற்கு மாறாக, நித்திய மரணத்தை நிராகரிக்கவும் எச்சரிக்கிறார்.

வேதாகமத்தை வாசிப்பதின் மூலம் நீ இயேசுவைக் குறித்து கூடுதலாகக் கற்றுக்கொள்ளவும், வாழ்க்கையின் நம்பிக்கையைப் பற்றி அறிந்து கொள்ளவும் முடியும். கிறிஸ்டடெல்ஃபியர்கள் (இந்த பெயரின் அர்த்தம் கிறிஸ்துவுக்குள் சகோதர, சகோதரிகள்) உங்கள் உபயோகத்திற்கென்று இந்தப் புத்தகத்தை வெளியிட்டுள்ளார்கள். தேவனைப் புரிந்து கொள்ள கேள்விகள் உண்டானால், அவரால் அளிக்கப்பட்டுள்ள பதில்கள், அவருடைய வார்த்தையிலும், இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்களிடமும் கிடைக்கும்.

இயேசு தமது சீஷர்களுக்குச் சொன்னது: *"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்"* (யோவான் 14:6).

நீங்கள் இன்னும் கூடுதலாகக் கற்றுக்கொள்ளும் போது, அவரை நம்பத்தகுந்த பல காரணங்களைக் காண்பீர்கள்.

**பவுல் ஸில்மர்**

## கேள்விகள்

1. இயேவைக் குறித்த செய்தி எங்கிருந்து நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது ?
2. விசேஷித்த மகனைப் பற்றிய வாக்குத்தத்தங்களை யார் யார் பெற்றுக்கொண்டார்கள் ?

3. ‘கிறிஸ்து’ என்று சூட்டின பெயரின் அர்த்தம் என்ன? அதை ஏன் இயேசுவுக்கு உபயோகித்தார்கள்?

4. இயேசுவின் பிதா மற்றும் தாயாக இருந்தது யார், யார்?

5. இயேசுவின் போதனைகளில் அடிப்படையாகக் கொடுக்கப்பட்ட சில காரியங்கள் எவை?

6. இயேசு பாவத்தின் மேல் எப்படி ஜெயம் கொண்டார்?

7. இயேசு மரணத்தின் மூலம் எப்படி வெற்றி பெற்றார்?

8. அவருடைய ஜெயத்தில் நாம் எவ்வாறு பங்கு பெறக் கூடும்?

9. இப்பொழுது இயேசு எங்கே இருக்கிறார்?

10. இயேசு இப்பொழுது என்ன செய்துக் கொண்டிருக்கிறார்?

11. கிறிஸ்துவைக் குறித்து இன்னும் நிறைவேறாத வாக்குத்தத்தங்கள் எவை?

12. அவைகள் கடைசியாக எப்படி நிறைவேற்றப்படும்?


இலவச வேதவாசிப்புத் திட்டத்தைப் பெற்றுக்கொள்ள கீழே கொடுக்கப்பட்டிருக்கும் முகவரிக்கு எழுதுங்கள்.

**கிறிஸ்டடெ ஃல்பியன்ஸ்**
**தபால் பெட்டி எண் 4237**
**பெங்களூர் 560042, இந்தியா**

நூல் வெளியிட்டு அச்சிட்டோர்:
Elsewhere:
**Printland Publishers, GPO Box 159,**
**Hyderabad A.P. 500001, INDIA**